Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 223

சனிக்கிழமை
06 ஜூலை 2024

ஆனி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

**முச்சந்தி முரளி**



"உவைய சனங்கள் கடவுளா நினைச்சால் அவை அதுக்கு மாறாத்தானே நடக்கினம்"

## சாவகச்சேரி மருத்துவமனைக்கு மனித உரிமை ஆணைக்குழு பயணம்!

யாழ்ப்பாணம், ஜூலை 6
சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் தலைமையிலான குழுவினர் கண்காணிப்புப் பயணம் ஒன்றை நேற்று மேற்கொண்டனர். 11



சாவகச்சேரி மருத்துவமனையின்

# மருத்துவர்கள் போராட்டம்; நோயாளிகள் திண்டாட்டம்

### விடுதி நோயாளர்கள் வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றம்
### மருத்துவர்களுக்கு எதிராக மக்களும் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

சாவகச்சேரி மருத்துவமனையை புதிதாகப் பொறுப்பெடுத்த மருத்துவ அதிகாரி மருத்துவமனையை மேம்படுத்த எடுத்த முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் விதமாக, அவரை இடமாற்றுமாறு கோரி, யாழ். சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர்கள் நேற்றுத் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 11

தீவகப் போக்குவரத்து

## பயணிகள் படகுகளுக்கு தரச் சான்றிதழ் இல்லை

ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 6
யாழ்ப்பாணம் - தீவகத்துக்கு இடையில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் எந்தப் படகுக்கும் தரநிர்ணயச் சான்றிதழ் இல்லை என்று, யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நேற்றுச் சுட்டிக் 11

யாழ்ப்பாணத்தில்

## 20 ஏக்கருக்கும் மேல் சுண்ணக்கல் அகழ்வு

ஒருங்கிணைப்புக் குழுவில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 6
யாழ்ப்பாணத்தில் 20 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் சட்டவிரோதமான முறையில் சுண்ணக்கல் அகழப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 10

## சம்பந்தனின் இறுதிச்சடங்கு திருகோணமலையில் நாளை

திருகோணமலை, ஜூலை 6
தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பந்தனின் இறுதிச் சடங்கு திருகோணமலையில் நாளை இடம்பெறவுள்ளது. 11



300 ஆண்டுகள் புராதனமான

## துணவி சிவன் ஆலயம் சீரமைப்புகள் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை 6
சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பழைமை வாய்ந்த துணவி சிவன் ஆலயம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 11

## மீனவர் ஒருவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6
யாழ்ப்பாணம் - வேலணைப் பகுதியிலிருந்து மீன்பிடிக்காகச் சென்ற மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள் 10

மன்னாரிலிருந்து

## மூவர் தமிழகத்தில் தஞ்சம்!

மன்னார், ஜூலை 6
தலைமன்னாரிலிருந்து தாய் மற்றும் 2 குழந்தைகள் என மூவர், 10

நல்லூர்ப் பெருந்திருவிழா

## பக்தர்கள் நலனைக் காப்பதற்கு உரிய நடைமுறையைப் பேணுக

இந்து சமயப் பேரவை கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 6
நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவின்போது பக்தர்களின் நலனைப் பாதுகாப்பதற்காக, யாழ்ப்பாணம் மாநகரசபை முறையான நடைமுறைகளைக் கையாளவேண்டும் என்று யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சக்திகிரீவன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் 11

## ஜூலை 9ஆம் திகதி நாடாளுமன்று கூடும்

கொழும்பு, ஜூலை 6
நாடாளுமன்றம் எதிர்வரும் ஜூலை மாதம் 9ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கூடவுள்ளதாக நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார். 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேர்தல்களில் கைவிரல் மை இனித் தேவையில்லை

## சட்டத்தில் திருத்தம் விரைவில்

கொழும்பு, ஜூலை 6

**தேர்தல்களின்போது விரல்களுக்கு மைபூசும் முறைமை இனி அவசியமில்லை என்று ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் தலைவரும், பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

தேர்தல் பணியில் 2010ஆம் ஆண்டு முதல் ஆட்கள் பதிவானது கணினி மயமாக்கப்பட்டு வருகிறது. ஒருவர் இரு இடங்களில் வாக்களித்ததாகப் பதிவு செய்யப்பட்டால், அவர் அதிகாரிகளின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவார்.

அதன்படி, விரல்களுக்கு மைபூச வேண்டிய அவசியம் இல்லை. இதன் மூலம் அதற்கான செலவையும் குறைக்க வாய்ப்புள்ளது.

ஒரு வாக்காளர் இரு இடங்களில் வாக்களிக்க வாய்ப்புள்ளது என்றதன் அடிப்படையில் விரல் மை பயன்படுத்தப்பட்டது. தனிநபர்களின் பதிவை கணினிமயமாக்கும் இந்த தொழில்நுட்பத்தின் மூலம் ஒரேமாதிரியான பெயர்கள் கண்டறியப்படும், அடையாள அட்டை எண்கள் போன்றவை சரிபார்க்கப்படுவதால், இரு இடங்களில் தனிநபரின் வாக்குகள் பதிவாவதற்கு வாய்ப்பில்லை.

அந்தவகையில் இதுதொடர்பான சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்றும் ரோஹண ஹெட்டியாராச்சி மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# ஒரு இலட்சம் வருமானம் பெறுபவர்களுக்கே வரி

கொழும்பு, ஜூலை 6

மாத வருமானம் ஒரு இலட்சம் ரூபாவைத் தாண்டவில்லை என்றால் வரி செலுத்துவதைத் தவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வரி செலுத்தும் அடையாள இலக்கம் பெற்றுள்ளவர்கள் வரி செலுத்துமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து கடிதங்கள் அல்லது குறுஞ் செய்திகள் வந்தால் ஒரு இலட்சம் மாத வருமானம் பெறாதவர்கள் அதனை அறிவித்து வரி செலுத்துவதைத் தவிர்க்கலாம்.

இது தொடர்பில் அருகிலுள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களப் பிராந்திய அலுவலகத்துக்கு அறிவிக்கமுடியும்.

இதுவரையில், 23 இலட்சம் பேருக்கு வரி அடையாள இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஜூன் மாதத்தில் மட்டும் 13 இலட்சம் பேர் வரி இலக்கத்தைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை- ஜூலை மாத இறுதிக்குள் வரி இலக்கம் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை 73 இலட்சமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-6)

# கல்லாறில் 'யுக்திய' 10 பேர் சிக்கினர்

கிளிநொச்சி, ஜூலை 6

கிளிநொச்சி, கல்லாறுப் பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நேற்று 'யுக்திய' திடீர்ச் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது மணலகழ்வு, கசிப்புக் காய்ச்சல் உள்ளிட்ட சட்டவிரோதச் செயல்கள் பல தடுத்து நிறுத்தப்பட்டதுடன் 10 பேர் அதிரடியாகக் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை பொலிஸ் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-113,27)

# தமிழ், முஸ்லிம் ஆதரவு ரணிலுக்கே நிச்சயம்

## கயாஷான் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய பொதுவேட்பாளராகக் களமிறங்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு நிச்சயம் கிட்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கயாஷான் நவனந்த தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காப் பொதுஜன பெரமுனக் கட்சி அரசிலிருந்து வெளியேறக்கூடும். மொட்டுக் கட்சியின் உறுப்புரிமையை ஜனாதிபதி ஏற்கவேண்டும் என அவர்கள் கூறுவதில் இருந்து தெளிவாகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியில் உறுப்பினர்கள் 10 முதல் 15 பேர்வரை ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவார்கள். தமிழ், முஸ்லிம் எம்.பி.க்களின் ஆதரவும் கிடைக்கப்பெறும். தேசிய வேட்பாளராகவே ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார். அவரை வெற்றிபெறவைத்து பொருளாதார மீட்சிப் பயணத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# பெரமுனவுடன் சேர ரணில் தயாரில்லை


## ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சியில் அங்கத்துவத்தைப் பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் தயாரில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

தேசிய வேட்பாளராகப் பொதுச் சின்னத்திலேயே ஜனாதிபதி களமிறங்குவார். மொட்டுச் சின்னத்தில் போட்டியிட அவர் தயாரில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அதேவேளை பொதுஜன பெரமுனக் கட்சியில் இணைந்து, அங்கத்துவத்தைப் பெற்றால் மாத்திரமே ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் பரிசீலிக்கலாம் என மொட்டுக் கட்சி செயலாளர் தெரிவித்துள்ளார். (ச-44)



# யாழ்.பொலிஸ் பிராந்திய புதிய அத்தியட்சகராக சூரிய பண்டார

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியத்துக்கு புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ள சூரிய பண்டார நேற்று உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். இதுவரை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்த பிரதிப்பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். அவருடைய பதவி நிலைக்கே சூரிய பண்டார நியமிக்கப்பட்டுள்ளார். (ச-26,66)

# ஆணொருவரின் சடலம் மீட்பு

முல்லைத்தீவு, ஜூலை 6

முல்லைத்தீவு - ஐயங்கன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கராயன் குளத்தின் பின்பகுதியில் ஆணொருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் ஐயங்கன்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ச-113)

# கடந்த வாரத்தில் டெங்கு 846

கொழும்பு, ஜூலை 6

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் கடந்த வாரத்தில் 846 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச)



# தமிழ் மக்களின் வாக்கு ரணிலுக்குக் கிடைக்காது

## ஹர்ஷன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைக்கப்பெறப் போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்க் கட்சிகள் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் ஆதரவும் ஜனாதிபதிக்குக் கிடைக்கப்போவதில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்தால் அரசியலில் இருந்து ஓய்வுபெறவேண்டிய சூழ்நிலையே ஏற்படும்.

மக்கள் ஆணையுடன்தான் புதிய அரசு அமையவேண்டும். மக்கள் ஆணையுடனேயே ஜனாதிபதி தெரிவாகவேண்டும்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணை இல்லை. சூழ்ச்சி மூலம் அதனைப் பிற்போட இடமளிக்க முடியாது. நீதிமன்றம் ஊடாக நீதி கிட்டும் - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி உரைக்கு ஒருகோடி செலவாம்

## நாடாளுமன்ற வட்டாரம் தகவல்

கொழும்பு, ஜூலை 6

நாடாளுமன்றம் கடந்த 2 ஆம் திகதி கூடியபோது சுமார் ஒரு கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையொன்றை நிகழ்த்துவதற்காக இந்த நாடாளுமன்ற அமர்வு இடம்பெற்றது.

ஜனாதிபதியின் உரையின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துடன் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

ஒன்றரை மணிநேரம் மாத்திரமே இந்த அமர்வு இடம்பெற்றது.

நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் சந்தர்ப்பத்தில் ஒருநாளுக்குச் செலவிடப்படும் தொகை, இந்த குறுகிய அமர்வுக்கு செலவிடப்பட்டுள்ளது என்று நாடாளுமன்றப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## ஆசிரியருக்கு அவதூறு சந்தேகநபருக்கு பிணை

யாழ்ப்பாணம், ஜூலை 6

வவுனியாவில் ஆசிரியர் ஒருவருக்கு போலி முகநூலில் அவதூறு ஏற்படுத்தி, தொலைபேசியில் மிரட்டல் விடுத்த கிராமஅலுவலர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். வவுனியா வடக்கு கல்வி வலயத்திலுள்ள பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் போலி முகநூலில் அவதூறு தகவல்கள் பகிரப்பட்டதுடன், தொலைபேசியிலும் ஆசிரியருக்கு அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்டிருந்தது. இதுதொடர்பில் பாதிக்கப்பட்ட குறித்த ஆசிரியர் ஜனாதிபதி செயலகம், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் பொலிஸாருக்கு முறைபாடு செய்திருந்தார். முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபரான கிராமஅலுவலருக்கு எதிராக வவுனியா நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது கிராம அலுவலர் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ச-18-555)

## பிரிட்டன் தேர்தலில் ஈழப்பெண் வெற்றி



பிரிட்டன் தேர்தலில் ஈழத் தமிழ்ப் பெண்ணான உமா குமரன் வெற்றிபெற்றுள்ளார். தொழிற்கட்சியின் சார்பில் போட்டியிட்ட அவர் 19 ஆயிரத்து 145 வாக்குகளைப் பெற்றுள்ளார். இந்த வெற்றிமூலம் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கப்போகும் முதலாவது ஈழத்தமிழ்ப் பின்னணிகொண்ட பெண் என்ற பெருமை அவருக்குக் கிடைத்துள்ளது. ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபைமூலம் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதன் மூலம் மாத்திரமே நீதியை நிலைநாட்ட முடியும் என உமாகுமரன் தேர்தல் பரப்புரையின்போது தெரிவித்திருந்தார். (ச-66)

## இஸ்ரேலியத் தூதுவர் ரணிலுடன் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 6

இலங்கை, இந்தியா, பூட்டான் நாடுகளுக்கான இஸ்ரேலியத் தூதுவர் நவோ கிலோன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

சந்திப்பில் ஜனாதிபதியின் பிரதான மற்றும் பாதுகாப்பு ஆலோசகரான சாகல ரத்நாயக்க, இஸ்ரேலுக்கான இலங்கை கொன்சியூலர் தினேஷ் ரொட்ரிகோ ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச-25,6)

சீன நிதியுதவியில்

## பசுமையாக மாற்றப்படும் கொழும்புத் துறைமுகம்

அடுத்தவருடம் கொழும்புத் துறைமுகம் பசுமைத் துறைமுகமாக மாற்றப்படவுள்ளது. சீன அரசாங்கம் இதற்கான நிதி மற்றும்தொழிநுட்ப உதவிகளை வழங்குகிறது. சீனாவின் ஷங்காய் நகர போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரிகள் கடந்த செவ்வாய்க்கிழமை துறைமுகங்கள் கப்பல் போக்கு வரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். இந்தக் கலந்துரையாடலின்போதே குறித்த திட்டம் இரு பகுதியினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-25,6)

## விபத்துகளால் அரசாங்கத்துக்கு அதிக செலவு

கொழும்பு, ஜூலை 6

வீதி விபத்துகள் சுகாதார அமைச்சுக்கு பெரும் சவாலாக இருப்பதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார். சாதாரணமாக நோயாளர்களுக்கு செலவிடப்படும் தொகையை போல்பத்து மடங்கு அதிகமானதொகை விபத்துகளில் சிக்குவோருக்கு செலவிடப்படுகிறது. எனவே வாகன சாரதிகள் வாகனத்தை செலுத்தும்போது அவதானமாக இருக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

## ஹொங்கொங் நுட்பம் இலங்கையில் அறிமுகம்

கொழும்பு, ஜூலை 6

ஹொங்கொங்கில் நடைமுறையில் உள்ள கடல்நீர் மூலம் கழிவறைகளை சுத்தம் செய்யும் தொழில்நுட்பத்தை இலங்கைக்கு வழங்கவுள்ளதாக ஹொங்கொங் சுற்றாடல் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரத்மலானையில் இடம்பெற்ற நீர் தொழில்நுட்ப விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்கிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது இலங்கையின் நீர் முகாமைத்துவம் தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இது மிகவும் இலகுவான செலவு குறைந்த தொழில் நுட்பம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## தினம் தெரியுமோ?

கடிச்சது கொடுக்கன், அடிச்சதோ காலுக்கு எண்டது மாதிரி ரண்டு நாளை பேஸ்புக்கில பிரச்சினைக்குரிய ஆக்களை விட்டிட்டு, அதை வெளிப்படுத்தின ஆக்களை கரிச்சுக்கொண்டு இருக்கினம். வேற ஒண்டுமில்லை, முந்தநாள் உதயன் பேப்பரில வந்த செய்திக்குத்தான் இவ்வளவு குத்திமுறியல். 'அவர் எவ்வளவு பெரிய ஆள் தெரியுமோ? அவரின்ர பேரைப் போட்டு கேவலப்படுத்தலாமோ?' எண்டு கொஞ்சக் குரூப் வரிஞ்சு கட்டிக்கொண்டு வெளிக்கிட்டிருக்கினம். இப்பிடி அவை மூளையைக் கழட்டி வைச்சிட்டு பொங்கமுதல், முதல்ல அந்தச் சம்பவம் உண்மையா, பொய்யா எண்டு அறிய வெளிக்கிட்டால், பிறகு அவை வாயே திறக்கமாட்டினம்.

உண்மையான பிரச்சினை, அந்த இல்லத்துக்கு கொண்டு வந்த மலையகப் பிள்ளையளுக்கு நடந்த அக்கிரமம் தான். எப்பவும் யாழ்ப்பாணத்தாருக்கு மலையக ஆக்கள் எண்டாலே ஒரு இளக்காரம் தான். அதின்ர வெளிப்பாடுதான், அங்கையிருந்து பிள்ளையளை கூட்டியந்திட்டு, இஞ்ச குளிக்கிறதுக்கு ஒரு குளியலறைகூடக் குடுக்காமல் 'வெட்டையில தொட்டியிருக்கு, அங்க குளியுங்கோ' எண்டு சொல்லியிருக்கினம். அப்பிடி வெட்டையில குளிச்ச பிள்ளையள் 'கமரா பூட்டியிருக்கு' எண்டு முறைப்பாடு செய்தும், அதைக் கழட்டவும் இல்லை, குளிக்கிறதுக்கு உள்ளுக்க இடமும் குடுபடேலை. மலையகப் பிள்ளையள் எண்டால் வெட்டையில குளிக்கிறதுக்கு என்ன? எண்ட மேலாதிக்க எண்ணம் தான் இப்பிடி அந்த இல்லக்காரர் நடக்கிறதுக்கு காரணம். அங்க பூட்டியிருந்த கமெராவில குளிக்கிறது எடுபடாது எண்டு சொன்னதை நம்பித்தானே அந்தப்பிள்ளையள் குளிச்சதுகள். ஆனால் அவை சொன்னதுக்கு மாறா அந்தக் கமெராவில பிள்ளையள் குளிச்சதுகளும் பதிவாகியிருக்காம். இது சம்பந்தமா முறைப்பாடு கிடைச்சு, அதை ஆராய வெளிக்கிட்ட அதிகாரியள் சிலர் அந்தக் கமெராவில கண்ட காட்சியளை வைச்சுத்தான், 'என்ன நடந்தாலும் பரவாயில்லை, உண்மையை வெளியில கொண்டந்தே தீருறது' எண்டு எவ்வளவோ எதிர்ப்பு வந்தாலும், அதையும் மிஞ்சி கஷ்டப்பட்டு, மேலிடத்துக்கு இந்தப் பிரச்சினையைக்கொண்டு போய்ச் சேர்த்தவை.

சிறுவர் இல்லங்களைக் கண்காணிக்கிற திணைக்களத்துக்குப் பொறுப்பா இருந்த அதிகாரி, சிலரைக் காப்பாத்த வெளிக்கிட்ட விசயம் வெளியால வந்ததாலதான், உடனடியா அந்தத் திணைக்களத்துக்கு ஆருக்கும் வளைஞ்சு குடுக்காத புது ஆளை ஆளுநர் போட்டவா எண்டும் தகவல். இப்ப கடும் விசாரணையள் நடக்குது. அதுக்குப் பிறகு எல்லாம் ஆதாரத்தோட வெளியில வரும் எண்டும் சொல்லுப்படுகுது.

இதொண்டும் தெரியாத பேஸ்புக் குஞ்சுகள், தங்கட பாட்டுக்கு ஏதோ கூச்சல் போட்டுக்கொண்டிருக்கினமே தவிர, அந்த மலையகப் பிள்ளையளுக்கு நடந்த அநீதிக்கு பரிகாரம் தேடுவமெண்டு கொஞ்சம் கூட யோசிக்கேலை. இன்னும் கொஞ்சப்பேர் 'அப்பிடி அங்க பிழை நடந்தாலும், இப்பிடி தலையங்கத்தில போட்டு ஊதிப்பெருப்பிக்கிற அளவுக்கு பெரிய பிழையோ?' எண்டு கேக்கினம். அந்நியன் படத்தில சொல்ற மாதிரி 'பிழையெண்டது பெனியன் சைஸ் மாதிரி லார்ஜ், ஸ்மோல் எண்டு அளவைப் பாக்கிறேலை. பிழை எண்டால் எல்லாம் பிழைதான்' எண்டதுதான் அவைக்குப் பதில்.

பசையிருக்கிறவைக்காக பரிஞ்சு பேச லட்சம் பேர் இருக்கினம். ஆனால் அந்தப் பாவப்பட்ட மலையகப் பிள்ளையளுக்கு நீதி வாங்கிக் குடுக்கவோ, அவைக்காக குரல் குடுக்கவோ ஒருத்தர் கூட யாழ்ப்பாணத்தில இல்லை யெண்டது எவ்வளவு பெரிய வெக்கக்கேடு தெரியுமோ? அதையிட்டு கேவலம், பிழையை மறைக்க சமயத்தை துணைக்கு இழுக்கிறதுதான். எல்லா மதத்திலையும், எந்தக் கடவுளும் அக்கிரமத்தை மறைக்கிறதாவோ, துணைபோனதாவோ அறியேலை. எளியாரை வலியார் அடித்தால் வலியாரை தெய்வம் அடிக்கும்

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுகளின் வளர்ச்சிக்கு காத்திரமான பங்கு கூட்டுறவு



இன்று சர்வதேச கூட்டுறவு தினம். அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

தர்மராஜா ரமேஸ்குமரர்
*செயலாளர்,*
*யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை*

கூட்டுறவு என்பது ஒரு மக்கள் தொகுதி யினரின் இணைவு மூலம் ஏற்படுத்தப்படும் ஒரு வகைச் செயற்பாடு எனக் கூறப்படுகின்றது. மக்கள் தொகுதியினரின் நாளாந்த வாழ்வியல் செயற்பாடுகள் அனைத்திலும் கூட்டுறவு செல்வாக்குச் செலுத்துகின்றது. மனிதனின் தோற்றம் முதல் மறைவு வரையான அனைத்துச் செயன் முறைகளிலும் பங்கு வகிக்கின்றது.

ஒவ்வொரு ஆண்டின் ஜூலை மாதத்தின் முதலாவது சனிக்கிழமை சர்வதேச கூட்டுறவு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு எண்ணக்கருக்கள் தொனிப்பொருளாகப் பிரகடனப்படுத்தப்படும். 2024 ஆம் ஆண்டு 'அனைவருக்கும் சிறந்ததொரு எதிர்காலத்தை உருவாக்கும் கூட்டுறவு' என்ற எண்ணக்கரு பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியாகக் கொண்டாடப்பட்டு வரும் இந்தக் கூட்டுறவு தினம் கூட்டுறவு அமைப்புகளின் தனித்துவத்தையும் சிறப்புத் தன்மையையும் எடுத்து விளக்குகின்றது.

கூட்டுறவு அமைப்புகளின் தோற்றம் இங்கிலாந்து தேசத்தில் 1844 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து படிப்படியாக உலகில் எல்லா நாடுகளிலும் இக் கூட்டுறவு அமைப்புகள் தோற்றம் பெற்று சேவைகளை வழங்கி வருகின்றன.

நாடுகளுக்கு நாடுகள் இந்தக் கூட்டுறவு அமைப்புகள் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்து வருகின்றன. நாட்டின் பொருளாதாரத்திலும் காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகின்றன. எமது அயல் நாடான இந்தியா பால் உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்து, சந்தைப்படுத்தி ஏற்றுமதி செய்யும் அளவுக்கு குறித்த உற்பத்தியானது கூட்டுறவு அமைப்பாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அத்துடன் பட்டுப்புடைவைகள் உற்பத்தி, ஏற்றுமதி சந்தைப்படுத்தல் என்பனவும் கூட்டுறவு உற்பத்தி முயற்சிகளினுடாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

கூட்டுறவின் அடிப்படை முதலாளித்துவ வாதிகளின் சுரண்டல், அதிகாரம் மற்றும் கொடுகடனின் தீவிரத் தன்மை என்பவற்றிலிருந்து மக்களை விடுவித்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி பொருளாதாரரீதியாகப் பலம் பெறச் செய்வதாகும். இவ்வாறு கூட்டுறவு முயற்சிகள் ஒரு நாட்டின் அரசாங்க பொறிமுறைகளின் கீழ் உருவாக்கி செயற்பட்டு வருகின்றன. இந்த ஆண்டின் சர்வதேச கூட்டுறவு தின கருப் பொருளும் அனைவருக்கும் சிறந்ததொரு எதிர்காலத்தை உருவாக்கும் கூட்டுறவு என்பதாகும்.

மக்கள் தொகையில் இருந்து கூட்டுறவு அமைப்புகளில் உறுப்புரிமையையும் அங்கத்துவத்தினையும் பெறும்போது அதன் அங்கத்தவர்களின் முழுமையான நலன்களே முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன. சுய உதவி, பரஸ்பரம், சிக்கனம், சேமிப்பு ஆகிய அடிப்படைப் பண்புகளைக் கொண்டமைந்த இக் கூட்டுறவில் அனைவரும் இணைவோம். ஒன்று கூடி உழைப்போம். இதன் மூலமாக சிறந்ததொரு வளம்மிக்க கூட்டுறவாளர்களை உருவாக்குவோம். எதிர்காலத்தில் கூட்டுறவுத்துறையை பலமானதொரு வளமாக கட்டியெழுப்புவோம்.

## செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

இணுவில் பொதுநூலகம் சிறுவர் திறன் விருத்தி மையத்தின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா, யாழ். இணுவில் இந்துக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் இணுவில் பொது நூலகத் தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் இன்று சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் ந.கிருஷ்ணேந்திரன் பிரதம விருந்தினராகவும், யாழ்.உயர்தொழில்நுட்பவியல் நிறுவனக் கணக்கியல்துறை விரிவுரையாளர் திருமதி துஷ்யந்தி ராஜகுமாரன், இணுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சி.சிவானுஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-66)

## கூட்டுறவு தின நிகழ்வு யாழில்

யாழ்ப்பாணம், ஜூலை 6

102ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையின் ஏற்பாட்டில் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கூட்டுறவு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் பேச்சு, கவிதை மற்றும் சித்திரப் போட்டிகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (ச-17)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் அசதி உண்டாகும். உறவினர்களுடன் ஏற்பட்ட மனவருத்தங்கள் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும்.

**இடபம்:** காரியங்கள் அனுகூலமாகும். உடல் ஆரோக் கியம் மேம்படும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். சிவபெருமானை வழிபட விருப்பங்கள் நிறைவேறும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஆட்கொள்ளும். வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். உடல்நலனில் கவனம் தேவை. உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** பணஉதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பெருமை உண்டாகும். குடும்பப் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**கன்னி:** அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். திடீர்ப் பணவரவுக்கும், திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. நிதானம் தேவை.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படும். சற்று அலைச்சல் ஏற்படலாம்.

**விருச்சிகம் :** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். அலைச்சல் உண்டாகும். சகோதரர்களால் அனுகூலம் ஏற்படும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. செலவுகள் அதிகரிக்கும். நண்பர்கள் பணஉதவி கேட்டு வருவார்கள். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்:** முடிவுகள் எடுப்பதற்கு உகந்தநாள். ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். பிடிவாதப் போக்கு மாறும். நற்பலன்கள் அதிகரிக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். மகிழ்ச்சியான செய்தியை பகிர்ந்துகொள்வர். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**மீனம்:** மகிழ்ச்சியான நாள். உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடவும்.

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

உற்சவத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச)



கிளிநொச்சி – அக்கராயன் சந்தியில், அக்கராயன் மன்னனின் சிலை நிறுவப்பட்டு 6 ஆண்டுகள் பூர்த்தியான நினைவு தின நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கரைச்சிப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச–25,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## தமிழ்த் தேசியத்தின் பொறுப்பு!

பிரிட்டன் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. 14 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆதிக்கம் செலுத்திவந்த கன்சர்வேடிவ் கட்சியின் ஆட்சி முடிவுக்கு வந்து, தொழிற்கட்சி ஆட்சியமைத்திருக்கின்றது. 650 தொகுதிகளில் வெற்றிக்கு 326 தொகுதிகளே தேவை என்ற நிலையில், 410 தொகுதிகளைக் கைப்பற்றியிருக்கின்றது தொழிற்கட்சி. இதனால், இன்னும் ஓரிரு தினங்களில் தொழிற்கட்சியின் தலைவரான கீர் ஸ்ரார்மர் பிரிட்டனின் பிரதமராக உத்தியோகபூர்வமாகப் பதவியேற்கவுள்ளார்.

கீர் ஸ்ரார்மர் உலகெங்கும் இடம்பெற்றுவரும் அநீதிகளுக்கு எதிராகக் குரல்கொடுத்தவர். மனித உரிமைகள் சட்டத்தரணியான அவர், ரொனி பிளேயர் பிரதமராக இருந்த காலத்தில் ஈராக் மீதான பிரிட்டனின் படையெடுப்பை வெளிப்படையாகக் கண்டித்தமைக்காக உலகெங்கும் அறியப்பட்டவர். அத்துடன், மனித உரிமைகள் செயற்பாடுகளுக்காக ராணி எலிசபெத்திடம் இருந்து 'நைட் ஹூட்' பட்டமும் அவருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறான பின்னணியுடைய கீர் ஸ்ரார்மர் அண்மைக் காலமாக ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் போர்க்குற்றங்களுக்கு எதிராகவும், ஈழத்தமிழர்களுக்கு நீதி கிட்டவேண்டும் என்றும் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்துவந்தார்.

இலங்கையில் சுயநிர்ணயம், சமாதானம் மற்றும் நீதிக்காக தமிழ் மக்கள் ஆற்றிய தியாகங்களை நாம் நினைவுகூர வேண்டியது அவசியமாகும். நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஆதரிப்பதில் ஸ்ரீலங்கா அரசாங்கம் இனியும் தாமதிக்காது என்பதை பிரிட்டன் உறுதிசெய்யவேண்டும். இலங்கையில் அமைதி மற்றும் அரசியல் உறுதித்தன்மையைக் கட்டியெழுப்பவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிட்டுவதற்காகவும் தொழிற்கட்சி தன் ஆட்சியில் வலுவாகக் குரல்கொடுக்கும் என்பதை கீர்ஸ்ரார்மர் தன் தேர்தல் பரப்புரையில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியிருந்தார். இவ்வாறானதொரு பின்னணியில், கீர் ஸ்ரார்மரின் கருத்துகள் செயல்வடிவம் பெறுவதற்கு உரிய அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியது தமிழ்த் தேசியக் கட்சிகளின் பெரும் பொறுப்பாகவே இன்று காணப்படுகின்றது.

போர் முடிவுக்கு வந்து 15 ஆண்டுகள் கடந்துவிட்டபோதிலும், தமிழ்த் தேசியத்தின் சர்வதேச ஆதரவுத் தளத்தை ஓரணியில் இணைக்கவோ அல்லது அத்தகைய பெரும் புள்ளிகளுடனான உறவுகளைப் பலப்படுத்தவோ தமிழ்த் தேசியக் கட்சிகள் தொடர்ச்சியாகத் தவறிழைத்தே வந்திருக்கின்றன. இவ்வாறான சர்வதேச ஆதரவுத் தளத்தை என்று தமிழ்த்தேசியக் கட்சிகள் பலப்படுத்துகின்றனவோ அன்றுதான், நீதிக்கான பயணம் அதன் அடுத்தகட்ட பரிணாமத்தை அடைந்து கொள்ளும். மனித உரிமைகள் செயற்பாட்டாளரும், சிறந்த சட்டத்தரணியும், மனிதாபிமானியுமான கீர்ஸ்ரார்மரை அணுகுவதும் கொள்கையளவில் ஒன்றிணைப்பதும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு அவ்வளவு கடினமான காரியமாக இருக்கப்போவதில்லை. மேற்கு நாடுகளில் அடுத்தடுத்த ஆட்சிமாற்றங்கள் எதிர்பார்க்கப்படும் இக்காலத்தில், தமிழ்த் தேசியத்தின் வெற்றியை, இலங்கைத்தீவுக்கு அப்பாற்பட்டுத் தேடவேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இருக்கவே செய்கின்றது.




## கடன் ஸ்திரத்தன்மையில் இலக்கு அடைவு வெற்றியே



### நிதி இராஜாங்க அமைச்சர் பெருமிதம்

**கொழும்பு, ஜூலை 6**

**உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட செயற்றிறன்மிக்க பொருளாதார மறுசீரமைப்புகளின் பிரதிபலிப்பாகவே சர்வதேச பிணைமுறிதாரர்களுடன் எட்டப்பட்டிருக்கும் கடன் ஒப்பந்த இணக்கப்பாட்டைக் கருதமுடியும் - இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
கடன்மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச பிணைமுறிதாரர் குழுவுடன் இணக்கப்பாடொன்றை எட்டியிருப்பதன் மூலம், அக்குழுவினருடனான பேச்சை இலங்கை வெற்றிகரமாகமுடிவுக்குக் கொண்டுவந்திருக்கின்றது.
இந்த இணக்கப்பாட்டின்படி 37 பில்லியன் டொலர் பெறுமதியான மொத்த சர்வதேசக் கடன்களில் 12.5 பில்லியன் டொலர் பெறுமதியான சர்வதேச பிணைமுறிகள் மறுசீரமைக்கப்படும். நாட்டின் கடன் ஸ்திரத்தன்மையை மீளுறுதிப்படுத்துவதை முன்னிறுத்தி தாம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளில் இந்த இணக்கப்பாடு மிகமுக்கியமானதோர் நகர்வாகும் - என்றார். (ச-இ)

## 2ஆம் கட்ட 'அஸ்வெசும' கணக்கெடுப்பு இம்மாதம்

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கான 'அஸ்வெசும' நிவாரணத் திட்டத்தின் இரண்டாம் கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. எனவே, இரண்டாம் கட்ட விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யாதவர்கள் அடுத்த வாரத்துக்குள் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 'அஸ்வெசும' திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்காக 4 இலட்சத்து 75 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றன. (ச-இ)

## புதிய 'யுக்திய' 1,426 பேர் கைது

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட யுக்திய நடவடிக்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 426 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இதன்போது 1.086 கிலோ ஹெரோய்ன், 782.7 கிராம் ஐஸ், 3.74 கிலோ கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-6)

## போதைக்காக மருந்து; பயன்பாடு அதிகரிப்பு

வேறு நோய்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படும் சில வகை மருந்துகளை இளைஞர்கள் மருந்தகங்களில் போதைக்காகக் கொள்வனவு செய்வது அதிகரித்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார். 'யுக்திய' நடவடிக்கையின் இரண்டாம் கட்டம் குறித்து ஊடகங்களுக்கு அறிவிக்கும் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். (ச)

## கெஹெலிய குடும்பத்தின் வங்கிக்கணக்கு முடக்கம்

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் குடும்ப உறுப்பினர்களான மனைவி மற்றும் மகள்களின் 16 நிலையான வைப்புக்கணக்குகளை முடக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு செய்த விண்ணப்பத்தையடுத்தே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.
இந்த வைப்புகளினதும் காப்புறுதிப்பத்திரங்களினதும் மொத்தப்பெறுமதி 93.125 மில்லியன் எனவும் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-25,6)

### நாளை

07.07.2024

**ஞாயிற்றுக்கிழமை- ஆனி - 23**

சுபநேரம் : 08.58 - 10.28
ராகுகாலம் : 04.28 - 05.58

### நாளொரு நல்வார்த்தை

**அறிவுத்தேவையைவிட கவனக் குறைவுதான் அதிக கஷ்டத்தை உண்டாக்கி விடுகிறது.**
- சேர்ச்சில் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலைப் பிற்போடின் கலவரங்கள் வெடிக்கும்

## சித்தார்த்தன் எம்.பி. எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூலை 6**

**ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் இந்த நாட்டில் மீண்டும் மிகப்பெரும் கலவரங்கள் உருவாகக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதாக புளொட் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவிப்புக்களுக்கமைய ஜனாதிபதித் தேர்தலுக்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இவ்வாறானதொரு சூழலில் தற்போது ஏன் தேசிய அரசாங்கம் தொடர்பில் பேசப்படுகிறது? என்பது எங்களுக்குப் புரியாத புதிராக உள்ளது.

ஆட்சியிலுள்ளவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையே தேசிய அரசாங்கம். எனவே, தேசிய அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு எங்களுக்கு அழைப்பு வந்தாலும் நிச்சயமாக நாங்கள் தேசிய அரசாங்கத்தில் இணைந்து கொள்ளமாட்டோம் - என்றார். (ம-66)



சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ச-25-66)


# ஆக்கங்கள் கோரல்

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகினால், ஈழத்து தமிழ்க்கவிதைக் களஞ்சியம் பாகம் - 2 எனும் நூல் தொகுக்கப்படவுள்ளது. 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையுள்ள ஈழத்து மரபுக்கவிதைகளை உள்ளடக்கிய ஆக்கங்கள் நூலுருவில் தங்களிடம் காணப்படின் அவற்றை தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பாக பண்பாட்டலுவல்கள் அலகுக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச-25)


# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 04 . 1958



மறைவு 03 . 07 . 2024

## சண்முகராசா சண்முகதேவன்

மட்டுவில் தெற்கு வாகையடி வீதியை பிறப்பிடமாகவும், குப்பிளான் வடக்கை தற்காலிகமாக வசிப்பிடமாக கொண்டவருமான சண்முகராசா சண்முகதேவன் கடந்த 03.07.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகராசா - அன்னலட்சுமி தம்பதியரின் மூத்த மகனும், வசந்தராணியின் அன்புக் கணவரும், அலெக்ஸ் சஜீவ், அமலினி விஜிதா, நிரோமி டிலக்கிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராகுலதேவன், ஆறுமுகதேவன், அசோகதேவன், காலஞ்சென்ற கலாதேவன் மற்றும் யோகாம்பிகை சிறிவள்ளிதேவி, நர்மதாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2024) ஞாயிற்றுக் கிழமை வீட்டில் ஆராதனையின் பின்னர் ஏழாலை உசத்தியோடை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மகன் - சசி (077 8764195)**
**மருமகன் - ரனுசாந் (0764886631)**

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பூவுலகில் 27 . 12 . 1943



விண்ணுலகில் 06 . 06 . 2024

யாழ். மீசாலை வடக்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி மல்லிகாதேவி தியாகராஜா (தேவி ரீச்சர்)

**(ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)**

**உள்ளமுருகி எமை உயிரோடு**
**அரவணைத்த பண்புமிகு தெய்வமே!**
**பாசத்தின் உறைவிடமே**
**உங்களைப் பார்ப்பது இனி எக்காலம்?**

**காலங்கள் மாறினாலும்**
**கனவுகள் சென்றாலும் உங்கள் கோலமுகமும்**
**உதட்டோரப் புன்னகையும் என்றும் மாறாது!**

**ஒரு உன்னதமான தெய்வம் நீ அம்மா**
**நாட்கள் 31 சென்றாலும் உங்களின்**
**பாசத்திற்கு நாம் பட்ட கடன் தீராதம்மா**
**ஆனால் முழு நினைவாக உயிர்**
**எம்முடன் தான் இருக்குதம்மா**

**துன்பம் துயரம் தெரியாமல்**
**எம்மை எல்லாம் ஆழாத்துயரில்**
**நாட்கள் 31 ஆனதம்மா**
**ஆயிரம் சொந்தங்கள் அணைத்திட**
**இருந்தாலும் நம் உள்ளத்தின் உள்ளே வளரும்**
**உங்கள் உடல் மட்டும் தான் பிரிந்து போனது**

**உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**இறைவனை வேண்டுகின்றோம்..!**

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்றுருந்த வேளையில் நேரில் வந்தும். தொலைபேசியூடாகவும். முகநூல். மன்னஞ்சல். RIPBOOK ஆகியவை மூலமாகவும். எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும். அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும். மலர்வளையங்கள். மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும். உற்றார். உறவினர். மருத்துவ நண்பர்கள் துணை மருத்துவ சேவகர்கள் நண்பர்கள் மற்றும் இன்று எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 04.07.2024 வியாழக்கிழமை அன்று மு.ப 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (06.07.2024) சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற்றிருப்பதால், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினருமாக வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

**மீசாலை வடக்கு கொடிகாமம்.**

**இங்ஙனம் குடும்பத்தினர்**

(CR 42780) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்மிக்க தயார்


ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கு நான் தயார். எனக்கு வாய்ப்பளிப்பதா என்பது தொடர்பில் கட்சியே முடிவெடுக்க வேண்டும் என்று பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதற்குரிய வேலைத் திட்டங்களை முன்னெடுத்துவருகின்றேன். கட்சியால் வழங்கப்பட்டுள்ள 10நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்குரிய திட்டங்களை வகுத்துவருகின்றேன். எனவே, வேட்பாளர் யார் என்பது தொடர்பில் கட்சியே இனி முடிவெடுக்க வேண்டும் என்றும் தம்மிக்க பெரேரா மேலும் தெரிவித்தார்.

(அ-ம-44)


## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 • 05 • 1963



மறைவு 16 • 07 • 2015

அமரர் **நந்தகுமார் இராசலிங்கம்**

திதி: ஆனிமாத பூர்வபக்ஷ பிரதமை (06.07.2024)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஒன்பதாண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS/889) (L-1)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 • 08 • 1944



உதிர்வு 21 • 06 • 2020

அமரர் **ருக்குமணி ஆனந்தவேல்**

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

திதி: பூர்வபக்க பிரதமை

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே!
அன்பின் உறைவிடமாய்
எங்களை அன்போடு அரவணைத்து
நாங்கள் எல்லோரும் நலமே வாழ
எங்களை அன்புடன் வாழவைத்த அன்னையே!
ஆண்டுகள் நான்கு கடந்தாலும்
உங்களின் ஆத்மா என்றும்
எம் நெஞ்சங்களில் கலந்திருக்கும்.

உங்களின் ஆத்மா சாந்திய அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

நீர்வேலி கந்தசுவாமி கோவிலடி,
நீர்வேலி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(cs.55380) (N-1)

# மரண அறிவித்தல்

## மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்

(ஓய்வு நிலை விஞ்ஞான ஆசிரியர் - யா/ வேம்படி மகளிர் கல்லூரி)



யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், பம்பலப்பிட்டி கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட மகேஸ்வரி சிவசுப்பிரமணியம் நேற்று (05.07.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (புகையிரத இலாகா அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ரவிக்குமார் மற்றும் சுரேன்குமார் (I.T. Engineer - லண்டன்), சிவப்பிரியா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தர்மராசா, சபா.தியாகராசா (ஓய்வு நிலை கணக்காளர் - வட பிராந்திய போக்குவரத்து சபை) மற்றும் சண்முகரத்தினம் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரியும், மீனலோஜினி (லண்டன்), சேகரன் (சிரேஷ்ட பொறியியலாளர் - அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமிர்தா, அஷ்மிதா, அபித்தா, கீர்த்தன், கவிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலை6.00 மணியளவில் கொழும்பு மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் காலை 9.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.12 1/5, காசல் வீதி,
பம்பலப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(cs.55590) (N-1)

தோற்றம் 02.05.1944 | மறைவு 05.07.2024


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுப் போட்டிகள்

# நெருக்கமான அட்டவணையால் மாணவர்களுக்குப் பெரும்சுமை

யாழ்ப்பாணம், ஜூலை 6

வலயமட்டப் போட்டிகள் மற்றும் கோட்டமட்டப் போட்டிகள் என்பவற்றுக்கான அட்டவணைகள் தொடர்ச்சியாக ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதால், மாணவர்கள் பெரும் சுமையை எதிர்கொண்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வலிகாமம் வலயமட்ட கால்பந்தாட்டம் இந்த மாதம் முதலாம், இரண்டாம், மூன்றாம் திகதிகளில் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து கோட்டமட்ட மெய்வன்மைப் போட்டிகள் நேற்றுமுன்தினமும் நேற்றும் நடைபெற்றுள்ளன. இதைத் தொடர்ந்து மீண்டும் வலயமட்டப்போட்டிகளை ஜூலை 9, 10 மற்றும் 11ஆம் திகதிகளில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, மாணவர்களின் சுமையைக் கருத்திற்கொண்டு இந்தப் போட்டிகளைப் பிற்போட்டுத் தருமாறு தொடர்புடைய வலய அதிகாரிகளிடம் மாணவர்களின் சார்பாகக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ம)

## யாழ்ப்பாணத்தில் இன்று சம்பந்தனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 6

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தனுக்கான அஞ்சலி நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் அமைந்துள்ள ஈ சிற்றி கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-66)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை.
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில. By ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்.
(26 வருட அனுபவம்)
பிரான்பற்று வீதி, துபேரன் கட்டட மாடி, சங்கானை.
(CS/55584) J-1
**TEL- 077 675 1649**

**கணிதம், வரலாறு**
**09 - O/L, A/L வகுப்புக்கள்**
மாணவர்களின் விருப்பத்துக்கேற்ப தனியாகவோ, குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தேசிய ரீதியாக சிறந்த பெறுபேறுக்காக வழிகாட்டும் உங்கள் ஆசான். தனியார் கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்.
(CS/55597) J-1
**T.P. 077 482 5438**

**வேலையாட்கள் தேவை**

| | |
|---|---|
| மேசன் | - (2500 - 3000) |
| மேசன் உதவியாளர் | - (2000 - 2500) |
| தச்சு வேலையாள் | - (2500 - 3000) |
| பெயின்ரர் | - (2000 - 2500) |
| வெல்டர் | - (2500 - 3000) |

தொடர்பு கொள்ள வேண்டிய நேரம்: (8.00 Am - 5.30 Pm)
(மதிய உணவு வழங்கப்படும்)
தொடர்புகளுக்கு: **077 724 5399**
(CS 874) V-1

## பெயர் மாற்றம்

**துரைசிங்கம் யெழில்அரசன்** ஆகிய நான் எனது பெயரை **துரைசிங்கம் எழில்அரசன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **துரைசிங்கம் எழில்அரசன்** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

**துரைசிங்கம் எழில்அரசன்**

(CS/28277) J-1

## நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் கோவில் நிறைவேற்று அலுவலர் பதவிக்காக விண்ணப்பம் கோரல்

கோவிலின் நிறைவேற்று அலுவலர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. தகுதி உடையவர்கள் 15.07.2024 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை செயலாளர் அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் நயினாதீவு எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

தகைமைகள் :

1. இந்து சமயத்தவராக இருத்தல் வேண்டும்.
2. 25 வயதிற்கு மேற்பட்டவராகவும் 65 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
3. ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.
4. பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு சமமான பட்டம்.
5. பதவி நிலைத்தர பதவி வகித்து ஓய்வு பெற்றவர்கள்.

விண்ணப்பத்துடன் தகைமைச் சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்பட வேண்டும். நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

செயலாளர்,
அறங்காவலர்
நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்

(CR-42774) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 02 . 1936 மறைவு 04 . 07 . 2024



### கமலாவதி மகேந்திரன்

(முன்னாள் ஆசிரியை, ஓய்வு பெற்ற உப அதிபர் - வட இந்து மகளிர் கல்லூரி)

வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட கமலாவதி மகேந்திரன் நேற்று முன்தினம் (04.07.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி மாணிக்கம் - பூரணம் மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இளைப்பாறிய தபாலதிபர் சதாசிவம்பிள்ளை மகேந்திரனின் அன்பு மனைவியும், மகேந்திரன் சத்தியசீலனின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்) அன்புத் தாயாரும், அம்பாலிகையின் (ஆசிரியை, புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை) அன்பு மாமியாரும், காலஞ்சென்ற மாணிக்கம் காராளசிங்கம் (கணக்காளர்), காலஞ்சென்ற திருமதி பத்மாவதி ஏரம்பமூர்த்தி (முன்னாள் ஆசிரியை - வட இந்து மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற மாணிக்கம் தர்மரட்ணம் (பொறியியலாளர்), அவுஸ்ரேலியாவில் வசிக்கும் Dr.புனிதவதி தங்கராசா (ஓய்வுபெற்ற கால்நடை வைத்தியர்), காலஞ்சென்ற மாணிக்கம் சண்முகலிங்கம் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி இந்திராணி சோமாஸ்கந்தன் (கொழும்பு), திருமதி ஜெயராணி சண்முகலிங்கம் (கொழும்பு) சதாசிவம்பிள்ளை பாலேந்திரா (இந்தியா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அளவெட்டி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**ம.சத்தியசீலன்** - 077 685 4726
070 685 4726
**ச. அம்பாலிகை** - 077 748 7708 (CS/55596) J-1

**தகவல்:**
**மகன் ம. சத்தியசீலன்**

## மரண அறிவித்தல்

எம்முடன் 07 . 11 . 1941 இறையுடன் 03 . 07 . 2024



### அமரர் மனோரஞ்சிதம் நடராஜா

யாழ். ஏழாலையைப் பிறப்பிடமாகவும் புத்தூர் நவக்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட மனோரஞ்ஜிதம் நடராஜா கடந்த 03.07.2024 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் நடராஜா அவர்களின் அன்பு மனைவியும், பகீரதன், பகீரதி, வளர்மதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கீதா, விக்னராஜா, நவரத்தினராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹரிபிரசாத், ஆரணயா, அனிதா, ஜீவிதா, பானுசா, கௌதமன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2024) சனிக் கிழமை அவரது இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் நிலாவரை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு:**
**Dr.Valarmathy - 077 292 0345**
**M.Pagerathan - 076 973 1990**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(Cr/42779) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரியில்

## பாவனைக்கு ஒவ்வாத கடலுணவுகள் அழிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

சாவகச்சேரி பொதுச்சந்தையில் சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 17 கிலோ கடலுணவுகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பறிமுதல் செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சாவகச்சேரி பொதுச் சந்தையின் விற்பனை அலகுகளில் திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டனர். இதன்போது பாவனைக்கு உதவாத பழுதடைந்த 17 கிலோ கடலுணவுகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

அதனையடுத்து விற்பனைக்கு வைத்திருந்த வியாபாரிகளுக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் இந்தத் தவறு இனி நிகழுமாயின் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. (ச- 9)

கிளிநொச்சியிலுள்ள

# பாடசாலைகளில் நெருக்கடி மரநிழலின் கீழ் கற்றல்கள்!

கிளிநொச்சி, ஜூலை 6

**கிளிநொச்சி மாவட்ட கிராமப்புறப் பாடசாலைகளில் நிலவும் இடநெருக்கடி காரணமாக மரநிழலின் கீழ் கற்றல் செயற்பாடுகள் நடத்தப்படுகின்றன.**

இது மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை பாதிக்கின்றது என்று பெற்றோரால் கவலை வெளியிடப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல பாடசாலைகளில் புதிய கட்டங்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும் கிராமப்புறப் பாடசாலைகளில் இடநெருக்கடி, தளபாட நெருக்கடி என்பன காணப்படுகின்றன.

அதனைவிட மிக நீண்டகாலத்துக்கு முன்னர் அமைக்கப்பட்ட பழைய கட்டடங்களே இப்போதும் காணப்படுவதால் பல கட்டடங்களில் வெடிப்புகள் உட்பட சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே, உரிய அதிகாரிகள் இதுதொடர்பில் கவனம் செலுத்தி மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு இடையூறு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச-13)



உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அப்துர் ரகீம் சித்திக், யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வருகைதந்து யாழ்.மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபனை சந்தித்துக் கலந்துரையாடினார். இதில் உலக உணவுத் திட்ட செயற்றிட்டத்தின் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. (ப-66)



## நீர்ப்பாசன வாய்க்கால் சீரமைக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 6

முல்லைத்தீவு - அம்பலப்பெருமாள் குளத்தின் நீர்ப்பாசன வாய்க்கால் மற்றும் வீதியைப் புனரமைத்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐந்தாம் வாய்க்கால் வழியாக வெளியேறும் நீரைப் பயன்படுத்தி 17 காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

எனினும் காணிகளுக்கான வீதியும், நீர்ப்பாசன வாய்க்கால்களும் புனரமைக்கப்படாமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது.

எனவே, இதுதொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். (ச-25-13)



## புதிய கல்விப் பணிப்பாளர் கிளி.தெற்குக்கு நியமனம்

கிளிநொச்சி, ஜூலை 6

கிளிநொச்சி தெற்கு வலயத்தின் புதிய கல்விப் பணிப்பாளராக கஜபதி காயத்திரி கடந்த புதன் கிழமை தனது பணிகளை பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் முன்பு வடமாகாணக் கல்வித் திணைக்களத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றியவராவார். (ச-25-13)



## மஸ்தான் பங்களிப்பில் மைதானம் புனரமைப்பு

மன்னார், ஜூலை 6

இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் பன்முகப்படுத்தப்பட்ட வேலைத் திட்டத்தின் நிதியாதுக்கீட்டின்கீழ் உப்புக்குளம் அல்பத்தாஹ் விளையாட்டு மைதானம் சீரமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் பிரதேச அமைப்பாளர்களும் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ச-25-213)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வாராந்த நிகழ்வு, நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. ஆசிரியர் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் தலைமையில் நடைபெற்றநிகழ்வில் உளவளத்துணையாளர் நா.நவராஜ், 'அயில்வேலன் கவி' எனும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவு ஆற்றினார். (ப-66)

கற்பிட்டியில்

## விவசாய வேலைத்திட்டம் ஒருகோடி ரூபா ஒதுக்கீடு

புத்தளம், ஜூலை 6

இளம் விவசாய தொழில் முனைவோர் தேசிய வேலைத்திட்டத்துக்கு கற்பிட்டி பிரதேச செயலர் பிரிவின் முசல்பிட்டி கிராமம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இதற்கென ஒருகோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்திட்டத்தின் அடிப்படையில், கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சால் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்குத் தாரைவார்ப்பு மீனவர் பிரச்சினைக்குத் தீர்வல்ல

## கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து

**கொழும்பு, ஜூலை 6**

**இலங்கையின் ஒரு பகுதியாகக் காணப்படும் எங்கள் தமிழ்த் தேசத்தை இந்தியாவுக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதற்கு ஒருபோதும் இணங்கமுடியாது. அவ்வாறானதொரு முயற்சி நாட்டுக்குச் செய்கின்ற மிகப் பெரும் துரோகமாகும்.**

-இவ்வாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கச்சதீவை இந்தியா மீளப்பெற்றுக் கொள்தல் என்ற அடிப்படையில் அல்லாமல் எல்லைகளைப் புதிதாக அமைத்துக் கொள்தல் என்ற அடிப்படையில் இந்தியா - இலங்கைக்கு இடையில் இரகசியமான முறையில் பேச்சு நடத்தப்பட்டு உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாக அறியக் கூடியதாகவுள்ளது.

இந்திய - இலங்கை மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இவ்வாறான உடன்பாடுகள் தீர்வைப் பெற்றுக்கொடுக்காது.

வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் வகையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு.

தமிழ்த் தேசத்துக்குச் சொந்தமான கடல் எல்லைகளை எங்கள் அனுமதி இல்லாமல் பெற்றுக்கொள்ள நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் - என்றார். (ச-25-66)

சுகாதாரச் சீர்கேடு

# 5 உணவகங்களுக்கு 50,000 ரூபா தண்டம்

சாவகச்சேரி, ஜூலை 6

சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட ஐந்து உணவக உரிமையாளர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் சாவகச்சேரி நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த வாரம் சாவகச்சேரி நகரப் பகுதியிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள் மீது திடீர்ப் பரிசோதனை நடத்தினர்.

இதன்போது சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட ஆறு உணவகங்கள் மீது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ. குணசாந்தன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குற்றத்தை ஒப்புக்கொண்ட ஐந்து வர்த்தகர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. நீதிமன்றுக்கு வருகை தராத வர்த்தகருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. (ச-9)

# நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்.தமிழ்ச்சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு யாழ்.நகரில் அமைந்துள்ள தனியார் விடுதியொன்றில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது பேராசிரியர் அ. சண்முகதாஸ் பெருந் தலைவராகவும், பேராசிரியர் தி.வேல்நம்பி தலைவராகவும், செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் செயலாளராகவும், லோ. துஷிகரன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். அருட்பணி ஜெரோம் செல்வநாயகம், இரா. செல்வவடிவேல், பேராசிரியர் சி.செல்வரஞ்சிதம், பா.பாலகணேசன் ஆகியோர் உப தலைவர்களாகவும், விரிவுரையாளர் கு.பாலசண்முகன், முனைவர் கி.அருட்செல்வி ஆகியோர் உப செயலாளர்களாகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் 21 உறுப்பினர்களைக் கொண்ட ஆட்சிக் குழு அமைக்கப்பட்டது. (ச-25-66)

## 20 ஏக்கருக்கும்...

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போதே, தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் வித்தகபுரம், பன்னாலைப் பகுதிகளிலும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் புத்தூர், வளலாய் பகுதிகளிலும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் சரசாலை, மீசாலை பகுதிகளிலும் இவ்வாறு சட்டவிரோதமாகச் சுண்ணக்கல் அகழப்பட்டு வருவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதன்போது, ஏற்கனவே இருக்கும் சட்ட நடைமுறைகளின் அடிப்படையில் முறையான அனுமதியைப் பெறவேண்டிய நடைமுறைகளைக் கட்டாயப்படுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் சுட்டிக்காட்டினார்.

இதையடுத்துக் கருத்துத் தெரிவித்த ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர், காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைப் பகுதியில் தற்போது சுண்ணக்கல் அகழ்வு இடம்பெறவில்லை. ஆனால், அங்குள்ள விவசாயிகள் சுண்ணக்கல்லை அகற்றி அதற்கு மேல் மண் பரவியே விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். இதற்கு அனுமதிக்கத்தான் வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

இதையடுத்து யாழ்ப்பாணத்தின் பிரபல வர்த்தகர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"1962 ஆம் ஆண்டுமுதல் சுண்ணக்கல்லின் இரண்டாம் நிலையை மாவட்டம் விட்டு பிறிதொரு மாவட்டத்துக்குக் கொண்டுசென்று தான் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவதாகவும், சுண்ணக்கல் தொடர்பான சட்டங்கள் இன்மையால் நீதிமன்றத்தால் தனது வாகனங்கள் விடுவிக்கப்பட்டதாகவும்" என அவர் சுட்டிக்காட்டினார். இதையடுத்து, நீதிமன்றத் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு செயற்பட முடியாது என்றும், சட்டநுணுக்கங்களை ஆராய்ந்து பொருத்தமான தீர்மானமொன்றை எடுக்கவேண்டும் எனவும் இதன்போது முடிவெடுக்கப்பட்டது. (அ-ம-125)

## மீனவர்..

ளார். வேலணை துறையூர்ப் பகுதியைச் சேர்ந்த 46 வயதான மீனவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-66-125)

## மன்னாரிலிருந்து...

அகதிகளாக நேற்று வெள்ளிக்கிழமை தனுஷ்கோடியைச் சென்றடைந்தனர்.

தமிழக கடற்பகுதியில் அவர்களை மீட்ட பொலிஸார், மேலதிக விசாரணைகளின் பின்னர் மூன்று பேரையும் மண்டபம் அகதிகள் முகாமில் தங்கவைத்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியால் இலங்கையில் வாழ முடியாதுள்ளதாகவும், வெம்பக்கோட்டை அகதிகள் முகாமில் வசிக்கும் தனது தாயாருடன் சேர்ந்து வாழ்வதற்காகவே இவ்வாறு தமிழகத்தில் தஞ்சமடைந்ததாகவும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (அ-ம-50)

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 . 02 . 1953



மறைவு
05 . 07 . 2024

**கதிரிப்பிள்ளை இரத்தினம் (தம்பித்துரை)**

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் இணுவில், குரும்பசிட்டியை வதிவிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை இரத்தினம் (தம்பித்துரை) அவர்கள் நேற்று (05.07.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் இளைய புத்திரனும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை- மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தினியின் அன்புக் கணவரும், நூபா, அனுசா, தர்சிகா, கார்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீபிரதீப், லோச்சந்தர், கிருஷாந், யுகேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுவஸ்திகா, சஷ்வின், சஞ்ஜெய் பிரணிதா, ஷைந்தவி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

தமிழகம் வீதி
குரும்பசிட்டி கிழக்கு
தெல்லிப்பளை.

**தொடர்பு: 076 323 7811**
**077 134 5344**
**077 977 9479**

(CS 883) V-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மருத்துவர்கள்...

இந்தப் போராட்டத்தின் காரணமாக, அவசர சிகிச்சை தவிர்ந்த ஏனைய மருத்துவ சேவைகளில் ஈடுபடும் மருத்துவர்கள் நேற்றுச் சேவைகளில் ஈடுபடவில்லை. இதனால், நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். நோயாளிகளைப் பற்றி எந்த அக்கறையும் கொள்ளாத மருத்துவ அதிகாரிகள் சங்கம், "சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சுமுகமான மற்றும் பாதுகாப்பான சூழல் ஏற்படும் வரை போராட்டம் தொடரும்" என்று தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி ஆதார மருத்துவமனையை மேம்படுத்த உழைக்கும் என்னை மருத்துவமனையின் பொறுப்பதிகாரி பதவியில் இருந்து அகற்ற சில மருத்துவர்கள் முயல்வதாகவும், அதற்கு மருத்துவ அதிகாரிகள் சங்கம் துணைபோவதாகவும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா நேற்றுமுன்தினம் குற்றஞ்சாட்டியிருந்தார். ஊழல் மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள் தொடர்பிலும் அவர் சில கருத்துகளை வெளிப்படுத்தியிருந்தார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே இந்தப் போராட்டம் நேற்று நடத்தப்பட்டுள்ளது.

**பொதுமக்கள் அதிருப்தி**

மருத்துவர்களின் போராட்டம் காரணமாக, நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டதையடுத்து தென்மராட்சியின் பொது அமைப்பினர், நலன் விரும்பிகள், பொதுமக்கள் என அனைவரும் ஒன்றிணைந்து மருத்துவமனைக்கு வருகைதந்திருந்த மாகாண சுகாதாரப் பணிப்பாளரைச் சந்தித்து தமது தரப்புக் கருத்துகளை வலியுறுத்த முற்பட்டனர். இதன்போது அங்குவந்த பொலிஸார், போராட்டத்தில் ஈடுபடாமல் கலைந்து செல்லுமாறு பொதுமக்களை அறிவுறுத்தினார்கள். தாம் போராட்டத்தில் ஈடுபடவில்லை என்றும், பொதுமக்களுக்கு இழைக்கப்படும் அநீதி தொடர்பில் மாகாண சுகாதாரப் பணிப்பாளரைச் சந்திக்கக் காத்திருப்பதாகவும் பொதுமக்களால் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. இதன்போது, மக்களை ஒருங்கிணைத்த சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் கிஷோரை பொலிஸார் கைது செய்து பின்னர் பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

போராட்டம் காரணமாக, சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் விடுதிகளில் தங்கி இருந்து சிகிச்சை பெற்றவர்கள் அனைவரும் வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டதோடு, சிலர் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என்றும் தெரிய வருகின்றது. (அ-ம-20-26-125)

## பக்தர்கள்...

உள்ளதாவது:-

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவின்போது பக்தர்கள் பல பாகங்களில் இருந்தும் வருகைதருவதால் சனக்கூட்டம் அதிகமாகக் காணப்படுவது இயல்பு. ஆனால், கடந்த காலங்களில் இந்தச் சூழ்நிலை முறையாகக் கையாளப்படவில்லை என்று பலர் எம்மிடம் முறைப்பாடு வழங்கியுள்ளனர். ஆதலால், இம்முறை திருவிழாக் காலங்களில் உரிய நடைமுறைகளை முறையாகப் பின்பற்றி பக்தர்களின் நலனைப் பாதுகாக்க யாழ்ப்பாணம் மாநகரசபை உரிய நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும். இதன்படி, திருவிழாக் காலங்களில் தேவையற்ற தடைகளை வீதிகளில் அமைத்து பக்தர்கள் துன்பப்பட்டு மரணபயம் ஏற்படும் வகையில் நடந்துகொள்வதை நிறுத்தவேண்டும்,

ஆலய வீதிகளில் பக்தர்கள் பாதணி அணியாமல் செல்வதால் அந்த வீதிகள் எந்தநேரமும் நீர்த்தாரைப் பயன்பாட்டை நடத்தி நிலத்தை குளிர்ந்த நிலையில் வைத்திருக்கவேண்டும்,

ஆலயத்துக்கு வரும் முதியவர்களுக்கு பொருத்தமானதொரு நடைமுறையைப் பின்பற்றி அவர்கள் எதிர்கொள்ளும் நெரிசல்களை இல்லாது செய்யவேண்டும்,

இயற்கை உபாதைகள் தொடர்பான பிரச்சினைகளால் எவரும் அவதிப்பட்டுவிடாமல் இருக்க முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்,

தெருநாய்களை ஆலயப் பகுதிகளில் இருந்து அப்புறப்படுத்தி தொற்றுநீக்கிகள் தெளிக்கப்பட வேண்டும்,

ஆலயத்துக்கு வருகைதரும் சைவத்துறவிகளின் அங்கவஸ்திரம், தலைப்பாகை பிடுங்கி வீசப்பட்டு அவமரியாதை செய்யப்பட்டுள்ளதாக எம்மிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் தலைவர்களுக்குக் கொடுக்கப்படும் மரியாதையை இவர்களுக்கும் வழங்கவேண்டும். இந்து ஆலயங்கள் சைவத் துறவிகளின் புகலிடம் என்பதையும் சொத்து என்பதையும் மறந்துவிடக்கூடாது.

திருவிழாக் காலங்களில் தெருக்கடைகளுக்கு அளவுக்கதிகமான வரிகளை விதிப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த வரிச் சுமையை வியாபாரிகள் பக்தர்கள் மீதே பகிர்கின்றனர். குறிப்பாக ஏழை வியாபாரிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

பெருந்திருவிழாக் காலங்களில் முருகப்பெருமான் கும்பம், தம்பம், விம்பம், அக்கினி, சிவாச்சார்யார், பக்தர்களில் எழுந்தருளி நடனம் புரிவதால் சகல தரப்பினரும் அன்போடும் பக்தியோடும் நடந்துகொள்ள வேண்டும் - என்றுள்ளது. (அ-ம)

## துணவி...

300 ஆண்டுகள் பழைமை வாய்ந்த குறித்த சிவன் ஆலயம் தொல்லியல் திணைக்களத்தால் தொன்மை வாய்ந்த புராதன சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில், மருத்துவர் சிவயோகநாதனின் நிதிப்பங்களிப்பில் முதற்கட்டமாக 2.5 மில்லியின் ரூபா செலவில் ஆலயம் சீரமைக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட தொல்லியல் திணைக்கள அதிகாரி கபிலன் தெரிவித்துள்ளார். இதற்கான மேலதிக நடவடிக்கைகளுக்கான அனுமதி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தால் நேற்று வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

## ஜூலை...

இலங்கைத் தொலைத்தொடர்புத் திருத்தச் சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதம் ஜூலை 9 ஆம் திகதியும், விலங்குகள் நலச் சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதம் ஜூலை 11 ஆம் திகதியும் இடம்பெறுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-66)

## சம்பந்தனின்...

சம்பந்தனின் புகழுடல் யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு நேற்றுத் திருகோணமலையில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இன்றும் பொதுமக்களின் அஞ்சலிப்புகள் தொடரவுள்ளன. இதைத் தொடர்ந்து நாளை சம்பந்தனின் இறுதிச் சடங்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## பயணிகள்...

காட்டப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது, படகொன்று மூழ்கியதால் ஒருவர் உயிரிழந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டு, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தீவகங்களுக்கு இடையில் முன்னெடுக்கப்படும் தனியார் போக்குவரத்துச் சேவையின் பாதுகாப்பு மற்றும் அதன் தரம் குறித்து ஆராயப்பட்டது. இதன்போதே, யாழ்ப்பாணம் - தீவகத்துக்கு இடையில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் எந்தப் படகுக்கும் தரநிர்ணயச் சான்றிதழ் இல்லை என்று பதில் மாவட்டச் செயலரான ம. பிரதீபன் தெரிவித்தார். இதையடுத்து, படகுச் சேவையில் ஈடுபடும் 40க்கும் மேற்பட்ட படகுகளின் உரிமையாளர்களுக்கும் ஒரு நிதிமூலத்தைப் பெற்றுக்கொடுத்து, அவர்களின் படகுகளை உரிய தரநிர்ணயங்களுக்கு உட்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26-125)

## சாவகச்சேரி...

மருத்துவர்களின் போராட்டம் காரணமாக, பொதுமக்கள் தமக்கான சேவைகளைப் பெற்றுகொள்வதில் இடர்பாடுகளைச் சந்திப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்துக்குக் கிடைத்த தொலைபேசி முறைப்பாடுகளுக்கு அமையவே இந்தக் கண்காணிப்புப் பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் களப் பயணத்தின்போது பெற்றுக்கொண்ட பல அவதானிப்புகள் தொடர்பில், எதிர்வரும் 8 ஆம் திகதி வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சர் மற்றும் மருத்துவமனையின் அபிவிருத்திக்குழுவினர் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார். (அ-ம-27-26)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்
A-9 வீதி முகப்புடன் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
➤ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
➤ இருபதடிப்பாதை (20).
➤ கைதடிச் சந்தி 100M தூரம்.
➤ சித்த வைத்தியசாலை முன்பாக.
➤ பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
➤ காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
➤ ஒரு பரப்பின் விலை ரூபா. 2000000/= (இருபது இலட்சம் ரூபாய்)
Golden Real Estate (pvt) Ltd.
077-029 4164
077-329 4130
077-294 1521

வேலையாட்கள் தேவை
Rolex' Bake Mart
துப்புரவு பணியாளர் தேவை.
நேரில் தொடர்புகொள்ளவும்.
T.P.: 021 222 9402
(CS/55595) N-1

வாடகைக்குத் தேவை
யாழ் நகர் எல்லைக்குள் (பிரதான வீதியில்)
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள
உணவகம் (Restaurant) ஒன்றிற்கு
கடை / வீடு வாடகைக்குத்
தேவை.
076 803 5352, 071 924 6420
(CS/55593) J-1

வேலையாள் தேவை
பருத்தித்துறை அல்வாய் வடமேற்கில் வீட்டு வேலை பார்ப்பதற்கும், 4 வயது குழந்தையை பராமரிப்பதற்கும் தங்கி நின்று வேலை பார்க்கக் கூடிய வேலையாள் தேவை.
(சம்பளம் - 30,000 பேசித் தீர்மானிக்கலாம்.)
077 078 4411, 075 078 4466
(CS/55528) J-1

சமையல் வேலைக்கு
ஆட்கள் தேவை
நன்கு சமைக்க தெரிந்த வீட்டு
வேலைகளை திறம்பட செய்யக்கூடிய
பணிப்பெண் தேவை
இடம்: யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில்
தொடர்பு: 077 072 5056
077 153 2398

வீடு வாடகைக்கு
யாழ். நகர எல்லைக்குள் ஒரு படுக்கை அறை கொண்ட வீடு சகல வசதிகளுடன் வாடகைக்கு உள்ளது.
வேலை பார்க்கும் சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 484 2578

கணக்காளர் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கிக்
கொண்டிருக்கும் பிரபல
தொழிற்சாலை ஒன்றிற்கு
அனுபவமிக்க கணக்காளர்
Accountant தேவை. சம்பளம்
அனுபவத்திற்கேற்ப 75000/- to
100000/- வரை வழங்கப்படும்.
தொடர்பு:- 077 788 5039
(CS/870) J-1

Win Repiar
உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை
இயந்திரம், A/C களும்
பழுதடைந்து விட்டதா? கவலையை
விடுங்கள். உங்கள் இடத்துக்கே வந்து
விசேட விலைக்கழிவுகளுடன் சிறந்த
முறையில் திருத்திக் கொடுக்கின்றோம்.
தொடர்புகளுக்கு:
076 834 6136
(CS/877) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோய்னுடன் இளைஞர் கைது


யாழ்., ஜூலை 6

2 கிராம் 165 மில்லி கிராம் ஹெரோய்னுடன் சங்கானையில் கைதான இளைஞரை, பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க, மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். சங்கானையில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய 26 வயதுடைய சந்தேகநபர் கடந்த ஞாயிற்றுக் கிழமை கைதுசெய்யப்பட்டார்.

(ட-125)

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 05 . 1936



மறைவு 04 . 07 . 2024

### வைரவிப்பிள்ளை கணபதிப்பிள்ளை

நறுவிலடி புலோலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைரவிப்பிள்ளை கணபதிப்பிள்ளை நேற்று முன்தினம் (04.07.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், சின்னார் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், சரஸ்வதி யின் பாசமிகு கணவரும், கலைச்செல்வி, மதியரசன், குமணன், ஆகியோரின் அன்புத் தந்தையும், துவிதரன், ருக்மணி, மயூரி ஆகியோரின் மாமனாரும், அஜந்தன், கீர்த்தனா, நிதுஷா, கவீனன், கஜேந்திரன், மயூரி, ஆதிரன், சதுர்சன், பிரக்ஞா ஆகியோரின் பாசமிகு பேரனும், மதுரன், விபிஸ் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
021 226 3986
075 967 7911

நறுவிலடி,
புலோலி தெற்கு,
புலோலி.

(CS/28146) J-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### பொன்னம்பலம் பிரதீபன் (பொன்னா)

(யாழ். இந்துவின் 92 ஆம் பிரிவின் பழைய மாணவர்)

ஒரு தாயின் வயிற்றில் நாம் ஒன்றாய்ப் பிறந்தோம்
இன்று எம்மை தவிக்கவிட்டு எங்கே நீசென்றாய்?
உடன் பிறப்பே உன் உறவே
உயர்ந்ததென்று இருந்தோம். எம் உயிரிலும் உதிரத்திலும் ஒன்றாய்
கலந்திருந்தோம் பாதியிலே நீ
எமைவிட்டுப்பிரிய நாம் துவண்டு விட்டோம்
புன்னகையோடு காணாமல் போனவனே
கண்ணீரோடு எம்மை
தவிக்கவிட்டுச்சென்றாயே வையகத்தில் நீ வளமோடு வாழ்வாய் என
வாஞ்சையுடன் நாங்கள்

மண்ணுலகில் வாழ்ந்து எம்மையெல்லாம் விட்டு விண்ணுலகம் சென்றடைந்த எங்கள் சகோதரன் அமரர் பொன்னம்பலம் பிரதீபன் (பொன்னா) அவர்களின் ஆறாத்துயரச் செய்தி கேட்டு உடன் வருகை தந்தோருக்கும், இறுதிக்கிரியை வரை எமது குடும்பத்துடன் இணைந்திருந்து பல வழிகளிலும் உதவியோருக்கும், ஓடிவந்து ஏற்ற உதவிகள் புரிந்த ஊரவர்களுக்கும், மரணச்சடங்கு நிகழ்வில் நேரில் வந்து அஞ்சலி செலுத்திய அனைத்து அன்புள்ளங்களுக்கும், நேரிலும், தொலைபேசியிலும், குறுந்தகவல்கள், சமூகவலைத்தளங்கள் என அனுதாபம் தெரிவித்து துயர்பகிர்ந்து ஆறுதல் செய்த அனைவருக்கும், மலர் வளையங்கள் செலுத்தி மரியாதை செய்தோருக்கும், உணவு தந்து உபசரித்த நல்லுள்ளங்களுக்கும் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டு இறுதி வரை உதவிய உற்றார்,உறவினர், நண்பர்களுக்கும் எமது குடும்பத்தினரின் மனப்பூர்வமான நன்றிகள். இன்று நடைபெறுகின்ற ஆத்ம சாந்தி பிரார்த்தனை நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
தர்ஷன் (மைத்துனர்)- 077 374 9207

(CS/55591) J-1

## 31ஆம் நாள் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (08.06.2024) சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர்

### நாகலிங்கம் மனோன்மணி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.07.2024) சனிக்கிழமை காலை 06.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (08.07.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம் 15.11.1938 மறைவு 08.06.2024

கே.கே.எஸ் வீதி,
கோண்டாவில்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
ராஜன் பாலா (பேரன்)
077 034 0154



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org